**சுருக்கம்**

பொதுப்பணிகள் – 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசுப்பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அவற்றின் மீதான மேல்நடவடிக்கைகளை கைவிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை**

அரசாணை (நிலை) எண்.9

நாள்: 2.2.2021
சார்வரி, தை–20.
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்க:

1. அரசுக் கடித எண்.38148/கே1/2018–11, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே1) துறை, நாள் 18.1.2019.
2. தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், சென்னை – 600 009, கடித எண்.163/ததசெச/2019, நாள் 1.2.2021.
3. தலைவர், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை – 600 005, கடித நாள் 1.2.2021.

******

**ஆணை:**

சில அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, 22.1.2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற பணியாளர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாலை மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதனிடையே, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டங்களை உடனடியாக கைவிட்டு, மக்கள் பணிக்கு திரும்ப வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அனைவரும் போராட்டத்தை கைவிட்டு 31.1.2019 அன்று முதல் பணிக்குத் திரும்பினர்.

2. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகளை இரத்து செய்யுமாறு தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள்,

த.பி.பா

மேலே 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்ட கடிதங்களின் வாயிலாக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

3. அதனைத் தொடர்ந்து, 1.2.2021 அன்று வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில், மேற்குறிப்பிட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் அனைத்தையும் அரசு கைவிடுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, பின்வருமாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன:–

(i) 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக கைவிடப்படுகின்றன;

(ii) 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில், தண்டனை வழங்கி இறுதி ஆணைகள் வெளியிடப்பட்ட நிகழ்வுகள் எவையேனும் இருப்பின், அவை அனைத்தும் இரத்து செய்யப்படுகின்றன; மற்றும்

(iii) 22.1.2019 முதல் 30.1.2019 வரை நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள குற்றவியல் நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக கைவிடப்படுகின்றன.

5. மேலே பத்தி 4–ல் உள்ள ஆணைகளின்படி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, சம்பந்தப்பட ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்
அனைத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள், சென்னை – 600 009.
செயலாளர், சட்ட மன்ற பேரவைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்துத் துறை தலைவர்கள்.
காவல் துறை தலைமை இயக்குநர்,
ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை – 600 004.
பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம், சென்னை – 600 104.
இயக்குநர், குற்ற வழக்குத் தொடர்வுத் துறை, சென்னை – 600 005.

..3....

<u>நகல் :</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்–I,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் முதன்மை செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலாளர், சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ.II) துறை,
சென்னை– 600 009. (மூன்று நகல்கள்)
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.2.2021
பிரிவு அலுவலர்

2.2.2021